85—

பூங்கா

***569—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கையில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் பெரிய பூங்கா அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிவகங்கையில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மிகப் பெரிய பூங்கா அமைப்பதற்கான திட்டம் எதுவும் தற்போது சுற்றுலாத் துறையில் இல்லை.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், 1985 ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டதிலிருந்து எந்தவிதமான அடிப்படை முன்னேற்றங்களும் இல்லாத ஒரு நகரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அந்த பூமியிலே இன்றைக்கு எந்த வசதியும் இல்லாமல், மக்கள் வசிக்காமல், வெளியேறிக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை. அங்கே அரசு அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் கூட, 60 விழுக்காடு பேர் மதுரைக்குச் சென்று குடியேறி, தினந்தோறும் இங்கு வந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில், இன்றைக்குப் பள்ளிக் குழந்தைகளுக்குக்கூட கல்விச் சுற்றுலா என்ற திட்டத்தின் அடிப்படையிலே, கல்வி முறையில் மாற்றம் வந்து கொண்டிருக்கிற நேரத்தில், ஒரு தலைநகரத்தில், குறிப்பாக இன்னும் சொல்லவேண்டுமானால், அந்த மாவட்டத்திலேயே ஒரு பூங்கா இல்லை; எனவே, சிவகங்கையிலே ஒரு பூங்காவை நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். சிவகங்கையைப் பொறுத்தவரை, சிவகங்கை சீமை என்று காலங்காலமாக அழைப்பார்கள். ஆனால், அது சீமையாக இல்லை. அதனால்தான், எங்கள் மக்கள் இன்றைக்கு அங்கேயிருக்கிற வேலிக்கருவையை சீமைக்கருவை என்று அழைத்து மகிழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றி, அந்த மாவட்டத்தினுடைய பெருமையை, அந்த மாவட்டத்து மக்களுக்கான ஒரு வளர்ச்சியைக் கொடுப்பதற்கு அவசியம் தமிழக முதல்வர் அவர்கள் கருணையோடு ஒரு சுற்றுலாப் பூங்காவை அமைத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

2006 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு இருக்கக்கூடியவர்கள் வெளியேறிக் கொண்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்கிறார்கள். அப்படிப்பட்ட இடத்திற்கு ஒரு பூங்கா தேவையில்லை என்று இந்தத் துறை கருதுகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வத்தின் அடிப்படையில், துறை அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்க எனக்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் இருக்கட்டும். முதலில் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எஸ்.வி. சேகர்: நன்றி சொல்கிறேன். பரவாயில்லை, நன்றிதானே? நன்றி சொன்னால் நீங்கள் allow பண்ணுவீர்களே! அதற்காக நன்றி சொல்கிறேன். இந்த நாளை வெற்றித் திருநாளாக்கிய உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுற்றுலாத் துறையில் நடத்தப்படும் பொருட்காட்சிகளில், நாடகக் குழுக்களுக்கு வாய்ப்புகள் நிறைய அளிக்கப்படவில்லை. நாடகமே தொழிலாகக் கொண்ட பல நாடகக் குழுக்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை. அப்படியே வழங்கப்பட்டாலும், அவர்களுக்கு அதிகபட்ச ஊதியமாக சுமார் 2,000 ரூபாய் மட்டுமே வழங்கப்படுகிறது. அது இப்போதுள்ள போக்குவரத்து மற்றதையெல்லாம் பார்க்கும்போது— வெளியூர்களில் நாடகத்தையே தொழிலாகக் கொண்ட பல நாடகக் கலைஞர்கள் இருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து அந்த ஊதியத்தையும் உயர்த்தி, ஒவ்வொரு சுற்றுலாப் பொருட்காட்சியிலும் கண்டிப்பாகக் குறைந்தபட்சம் 25 சதவிகித நிகழ்ச்சிகள் நாடகத்திற்கு ஒதுக்கப்படுமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் கடந்த காலத்திற்குச் சரியாக இருக்கலாம். ஆனால், கலைஞருடைய ஆட்சிக்

காலத்தில் கலைஞர்களை மதிக்கக்கூடிய விதத்தில், ஒழுங்கான முறைகளில் அவர்கள் எதிர்பார்க்கக்கூடிய அளவிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. புஷ்பராஜ். திரு. புஷ்பராஜ், உங்களைத்தான். (குறுக்கீடு) பொன்னுசாமியா? திரு. பொன்னுசாமி, நீங்கள் இடத்தை மாற்றி உட்கார்ந்திருக்கிறீர்களா? உங்கள் இடத்திலே போய் உட்காருங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட கொல்லிமலை ஒன்றியத்தைச் சுற்றுலாத் தலமாக அரசு அறிவிக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன். கொல்லிமலை ஒன்றியத்தில், இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத அளவில் ஒரு மாபெரும் நீர்வீழ்ச்சி 200 அடி உயரத்திலிருந்து கொட்டுகிறது. அந்த இடத்திற்குச் செல்வதற்குப் போக்குவரத்து வசதி அமைத்துக் கொடுத்து, சுற்றுலாத் தலமாக அறிவிக்க முன்வருவாரா என மாண்புமிகு அமைச்சர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லாமல் இருந்தாலும்கூட, மானியக் கோரிக்கை வருகிற 28 ஆம் தேதி இருக்கிறது; கொல்லிமலைக்கு என்ன செய்வோம் என்பது அப்போது அறிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

86—

தொழில்நுட்பப் பயிலகம்

***171— திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—